SIVANMANAI



# திருவாசகம்

**பதிகம்: திருவார்த்தை**

**திருப்பெருந்துறையில் அருளியது**

*** * * * ***

## திருச்சிற்றம்பலம்

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

*** * * * ***

மாதுஇவர் பாகன் மறைபயின்ற
வாசகன் மாமலர் மேயசோதி
கோதில் பரங்கருணை அடியார்
குலாவும் நீதிகுணம் ஆகநல்கும்
போதலர் சோலைப் பெருந்துறைஎம்
புண்ணியன் மண்ணிடை வந்திழிந்து
ஆதிப் பிரமம் வெளிப்படுத்த
அருள்அறிவார் எம்பிரான் ஆவாரே.

மால்அயன் வானவர் கோனும்வந்து
வணங்க அவர்க்கு அருள்செய்தஈசன்
ஞாலம் அதனிடை வந்திழிந்து
நல்நெறி காட்டி நலந்திகழும்
கோல மணிஅணி மாடநீடு
குலாவும் இடவை மடநல்லாட்குச்
சீலமிகக் கருணை அளிக்கும்
திறம்அறிவார் எம்பிரான் ஆவாரே.

அணிமுடி ஆதி அமரர்கோமான்
ஆனந்தக் கூத்தன் அறுசமயம்

THIRUVASAGAM GROUP
Scan this QR code using the WhatsApp Camera to join this group

பணிவகை செய்து படவதேறிப்
பாரொடு விண்ணும் பரவிஏத்தப்
பிணிகெட நல்கும் பெருந்துறைஎம்
பேரருளாளன் பெண்பால் உகந்து
மணிவலை கொண்டு வான்மீன் விசிறும்
வகைஅறிவார் எம்பிரான் ஆவாரே.

வேடுருஆகி மகேந்திரத்து
மிகுகுறை வானவர் வந்துதன்னைத்
தேட இருந்த சிவபெருமான்
சிந்தனை செய்து அடியோங்கள் உய்ய
ஆடல் அமர்ந்த பரிமாஏறி
ஐயன் பெருந்துறை ஆதிஅந்நாள்
ஏடர்களை எங்கும் ஆண்டுகொண்ட
இயல்பு அறிவார் எம்பிரான் ஆவாரே.

வந்து இமையோர்கள் வணங்கிஏத்த
மாக்கருணைக் கடலாய் அடியார்
பந்தனை விண்டுஅற நல்கும்எங்கள்
பரமன் பெருந்துறை ஆதிஅந்நாள்
உந்து திரைக்கடலைக் கடந்துஅன்று
ஓங்குமதில் இலங்கை அதனில்
பந்தணை மெல்விரலாட்கு அருளும்
பரிசு அறிவார் எம்பிரான் ஆவாரே.

வேவத் திரிபுரஞ் செற்றவில்லி
வேடுவனாய்க் கடிநாய்கள் சூழ
ஏவற் செயல்செய்யும் தேவர்முன்னே
எம்பெருமான் தான்இயங்கு காட்டில்
ஏஉண்ட பன்றிக்கு இரங்கி ஈசன்
எந்தை பெருந்துறை ஆதிஅன்று
கேவலம் கேழலாய்ப் பால்கொடுத்த
கிடப்பு அறிவார் எம்பிரான் ஆவாரே.

நாதம் உடையதோர் நற்கமலப்
போதினில் நண்ணிய நல்நுதலார்
ஓதிப் பணிந்து அலர் தூவிஏத்த
ஒளிவளர் சோதிஎம் ஈசன்மன்னும்

போதலர் சோலைப் பெருந்துறைஎம்
புண்ணியன் மண்ணிடை வந்துதோன்றிப்
பேதங் கெடுத்து அருள் செய்பெருமை
அறியவல்லார் எம்பிரான் ஆவாரே.

பூஅலர் கொன்றைஅம் மாலைமார்பன்
போர்உகிர் வன்புலி கொன்றவீரன்
மாதுநல்லாள் உமைமங்கை பங்கன்
வன்பொழில் சூழ்தென் பெருந்துறைக்கோன்
ஏதில் பெரும்புகழ் எங்கள்ஈசன் இருங்கடல்
வாணற்குத் தீயில்தோன்றும்
ஓவிய மங்கையர் தோள்புணரும்
உருவுஅறிவார் எம்பிரான் ஆவாரே.

தூவெள்ளை நீறுஅணி எம்பெருமான்
சோதி மகேந்திர நாதன்வந்து
தேவர் தொழும் பதம்வைத்த ஈசன்
தென்னன் பெருந்துறை ஆளிஅன்று
காதல் பெருகக் கருணைகாட்டித்
தன்கழல் காட்டிக் கசிந்துஉருகக்
கேதம் கெடுத்துஎன்னை ஆண்டருளும்
கிடப்பு அறிவார் எம்பிரான் ஆவாரே.

அங்கணன் எங்கள் அமரர்பெம்மான்
அடியார்க்கு அமுதன் அவனிவந்த
எங்கள் பிரான் இரும்பாசம்தீர
இகபரம் ஆயதுஓர் இன்பம்எய்தச்
சங்கம் கவர்ந்து வண்சாத்தினோடும்
சதுரன் பெருந்துறை ஆளிஅன்று
மங்கையர் மல்கும் மதுரைசேர்ந்த
வகைஅறிவார் எம்பிரான் ஆவாரே.

**திருச்சிற்றம்பலம்**

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

*** * * * ***